## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (செப்ரம்பர் 2018)

# FA 2213 Appreciation of Local Art Traditions

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களும் என ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – I

01. (அ) உள்ளூர் கலை என்பதன்மூலம் நீர் விளங்கிக்கொண்டது யாது?

(10 புள்ளிகள்)

(ஆ) உமது பிரதேசத்தில் காணப்படும் உள்ளூர் கலைகளை, பட்டியலிட்டு, அதில் ஒன்றினைச் சுருக்கமாகத் தருக.

(10 புள்ளிகள்)

02. (அ) மகிடிக் கூத்து ஆற்றுகை முறையினை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(ஆ) மகிடிக் கூத்து சமூக அரங்காக வெளிப்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

03. (அ) பச்சை குத்துதல் கலையின் நுட்பங்களையும் அதன் அழகியல் தன்மையினையும் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) அதன் தற்காலப் போக்கு பற்றி ஆராய்க.

(10 புள்ளிகள்)

## பகுதி – II

04. உள்ளூர் கலைகளின் வகைப்பாடுகளை முன்வைத்து அதுபற்றி அறிஞர்களும் உள்ளூர் மக்களும் வெளிப்படுத்தும் கருத்துக்களை சுருக்கமாக பரிசீலிக்குக.
(20 புள்ளிகள்)

05. உள்ளூர் நிகழ்த்து கலையின் தொடர்பாடல் பண்புகளையும் அதன் தனித்துவத்தினையும் எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக.
(20 புள்ளிகள்)

06. கிழக்கிலங்கையில் பயில் நிலையில் இருக்கும் புலிக்கூத்து ஆற்றுகை வடிவத்தினைக் குறிப்பிட்டு அதன் சமூக பண்பாட்டுப் பெறுமானத்தினை மதிப்பிடுக.
(20 புள்ளிகள்)

07. உலகமயமாக்கல் சூழலில் உள்ளூர் கலையின் இயங்கியலும் அதன் சவால்களும் பற்றி கட்டுரை வரைக.
(20 புள்ளிகள்)

*****